# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2026

## சகல மதிப்பீட்டுப் பரீட்சகர்களுக்குமான

## விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தவதற்கான அறிவுறுத்தல்கள்

மிக முக்கியம் :-

- ❖ **கேட்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத, தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

- ❖ **விடைத்தாள் பரீட்சகராக தாங்கள் தெரிவுசெய்யப்படின் அதற்கு வழங்கப்படும் நியமனம் இப் பரீட்சையின் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் என்பதோடு, எதிர்கால மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பங்குபற்றுவதற்கான உரிமை அல்ல.**

**01. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தல்**

1.1 பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த தற்போது கல்வி அமைச்சின்/ மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் பாடசாலைகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் க.பொ.த (உ/தர)ப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட அனுபவம் மிக்க ஆசிரிய ஆலோசகர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(அ) விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய பட்டத்தினையோ டிப்ளோமா பயிற்சியையோ பெற்றிருப்பதோடு குறித்த பாடத்திற்குரிய பொருத்தமான நியமனம் பெற்ற ஆசிரியராயிருத்தல்

(ஆ) க.பொ.த (சா/ தர) (10,11 ஆம் தரங்களுக்கு) ஆசிரியராகக் கற்பித்தலில் ஈடுபடல் அல்லது ஆசிரிய ஆலோசகராக க.பொ.த சாதாரண தரத்தில் குறித்த பாடத்துடன் தொடர்புடைய அதிகாரியாகக் கடமையில் ஈடுபடல்.

1.2 Step – 3 இன் கீழ் விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய கல்வி மற்றும் தொழிற்றகமைத் தகுதிகளை உள்நுழைத்தல் கட்டாயமாகும். **அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

1.3 Step – 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களைப் பூரணப்படுத்துவது கட்டாயமாவதோடு அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

* தற்போது உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுமாயின் அல்லது தாங்கள் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பின் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியாது.

1.4 தாங்கள் அல்லது தங்கள் குடும்பத்து உறுப்பினர் ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவாராயின் தங்களால் விண்ணப்பிக்க முடியாது. குடும்ப உறுப்பினர் எனப்படுவோர் - தங்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், தங்களினதும் வாழ்க்கைத்துணையினது பெற்றோர் சகோதர சகோதரிகளும், அவர்களது பிள்ளைகளும், தங்களது அல்லது துணைவரின் / துணைவியின் பெற்றோர் அல்லது சகோதரர்கள் அல்லது அவர்களது பிள்ளைகள் அல்லது தங்கள் வசிப்பிடத்தில் தங்கியிருப்போரும் ஆவர்.

1.5 **இரண்டு பாடங்களுக்கு அல்லது இரண்டு மொழிமூலங்களுக்கு விண்ணப்பித்தல்:**
இரண்டு கட்டங்களில் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஒரே பாடத்தில் இரண்டு மொழிமூலங்களில் அல்லது கீழ் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

| | | |
|---|---|---|
| (21) சிங்கள மொழியும் இலக்கியமும் | (22) தமிழ் மொழியும் இலக்கியமும் | (33) வரலாறு |
| (47) இலக்கிய நயம் சிங்களம் | (48) இலக்கிய நயம் தமிழ் | (61) புவியியல் |
| (64) இரண்டாம் மொழி (சிங்களம்) | (65) இரண்டாம் மொழி (தமிழ்) | (62) குடியியற் கல்வி |
| (31) ஆங்கில மொழி | (72) அரபு | (60) வணிகக்கல்வியும் கணக்கீடும் |
| (46) இலக்கிய நயம் ஆங்கிலம் | (49) இலக்கிய நயம் அரபு | (63) முயற்சியாண்மைக் கற்கை |

1.6 விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அரச பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் (Online) அதிபரின் சான்றுபடுத்தலுடன் நிகழ்நிலையில் பரீட்சைத்திணைக்களத்திற்கு அனுப்புவதோடு சான்றுப்படுத்திய விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக சாராம்ச அறிக்கை அதிபர் / திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு தேவையான சந்தர்ப்பத்தில் முன்வைப்பதற்கென்று பாடசாலையில் / அலுவலகத்தில் கோவைப்படுத்தி வைக்கவேண்டும். **புதிய விண்ணப்பதாரிகள் மாத்திரம்** விண்ணப்பப்படிவத்தின் வன்பிரதியை உரிய தகைமைகளை உறுதிப்படுத்திய சான்றிதழ்களின் பிரதியை இணைத்து பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

1.7 **மேற்படி பரீட்சையின் மதிப்பீட்டு நிலையங்கள் கீழ்வரும் நகரங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மதிப்பீடு 14 நாட்கள் வரையில் நடைபெறும்.)**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. கொழும்பு | 12. நீர்கொழும்பு | 23. அம்பலாங்கொடை | 35. அநுராதபுரம் | 47. அம்பாறை |
| 02. மகரகம | 13. கம்பஹா | 24. எல்பிட்டிய | 36. பொலன்னறுவை | 48. கல்முனை |
| 03. ஹோமாகம | 14. நிட்டம்புவ | 25. காலி | 37. திருகோணமலை | 49. அக்கரைப்பற்று |
| 04. பிலியந்தலை | 15. இரத்தினப்புரி | 26. அக்குரஸ்ஸ | 38. கேகாலை | 50. மட்டக்களப்பு |
| 05. மொரட்டுவ | 16. பெல்மடுல்ல | 27. மாத்தறை | 39. பேராதனை | 51. வவுனியா |
| 06. ஹங்வெல்ல | 17. எம்பிலிபிட்டிய | 28. தங்காலை | 40. கம்பளை | 52. மன்னார் |
| 07. அவிசாவலை | 18. பலாங்கொடை | 29. அம்பாந்தோட்டை | 41. கண்டி | 53. யாழ்ப்பாணம் |
| 08. ஹொரண | 19. பண்டாரவளை | 30. குருநாகல் | 42. மாத்தளை | 54. நெல்லியடி |
| 09. பாணந்துறை | 20. பதுளை | 31. நிக்கவரெட்டி | 43. தெல்தெனிய | 55. கிளிநொச்சி |
| 10. களுத்துறை | 21. வெலிமடை | 32. குளியாப்பிட்டிய | 44. நுவரெலியா | 56. புத்தளம் |
| 11. மதுகம | 22. மஹியங்கனை | 33. சிலாபம் | 45. ஹட்டன் | 57. தம்புள்ளை |
| | | 34. கெக்கிராவ | 46. மொனராகலை | 58. வெல்லவாய |

குறிப்பு : * **போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது. எனவே இரண்டாவது தெரிவையும் குறிப்பிட வேண்டும்.**

* **விடைத்தாள் மதிப்பீட்டுக் காலத்தின் போது பரீட்சைத் திணைக்களத்தினால் தங்குமிட வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் முற்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.**

02. **விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்தல்**

2.1 சகல அரச பாடசாலைகளிலுமுள்ள ஆசிரியர்கள் **அதிபரின் சான்றுபடுத்தலின் பின்பு** தமது விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்து பிரதியை வைத்திருத்தல் கட்டாயமாகும்.

2.2 **புதிய விண்ணப்பதாரிகள் மாத்திரம்** பதிவிறக்கம் செய்த விண்ணப்பப்படிவத்தை Step – 3 இன் கீழ் குறிப்பிட்ட தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ் பிரதிகளுடனும் ஆசிரிய நியமனக் கடிதத்தின் பிரதியுடனும் அதிபர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு இணைப்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதோடு அதன் **இணைப்புடன் கூடிய பிரதியொன்றை கோவைப்படுத்தி வைப்பதற்காக பாடசாலைக்கு வழங்கவேண்டும்.**

03. **விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்தல்**

ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அதிபராலும், வலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்களின், வளவாளர்களின் விண்ணப்பப்படிவங்கள் வலயக் கல்விப் பணிப்பாளராலும் கோட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்களின் விண்ணப்பப்படிவங்கள் கோட்டக் கல்வி பணிப்பாளராலும் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிறுவனத் தலைவர் ஊடாகவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

04. **விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் (அதிபர் / நிறுவனத் தலைவர்)**

**4.1** விண்ணப்பதாரி நிகழ்நிலையில் (Online) குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா என்பதைப் பரிசீலிக்கவும்.

**4.2** விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட தகவல் சரியானவை என்பதைச் சான்றுப்படுத்தும் சந்தர்ப்பத்தில் தனித்தனியே உறுதிப்படுத்த வேண்டும்.

**4.3** அரச பாடசாலை ஆசிரியர்களுக்கு நிகழ்நிலையில் விண்ணப்பப்படிவங்களை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் Verification status இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் கீழ் விண்ணப்பதாரி அரச பாடசாலை ஆசிரியர் அல்லாதுவிடின் அவர் பற்றி தங்களது கணிப்பை விண்ணப்பப்படிவத்தில் உரிய பெட்டிகளில் குறித்த ஆங்கில எழுத்துக்களைக் குறிப்பிட்டுக் காட்டுதல் வேண்டும்.

**A** - சிறப்பானது    **B** - நன்று    **C** - சாதாரணம்    **W** – பலவீனம்

**4.4** இது அந்தரங்க அறிக்கையாகும். சகல அரச பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்களும் தங்களால் நிகழ்நிலை (Online) முறையில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

1. அவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களும் உறுதிப்படுத்திய பின்னர் பதிவிறக்கம் செய்யப்பட்டு (Download) கோவைப்படுத்தப்பட்டு (புதிய விண்ணப்பதாரிகள் எனின் உரிய இணைப்புகளுடன்) உங்கள் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

2. புதிய, அரச பாடசாலை ஆசிரியர்கள் அல்லாத விண்ணப்பதாரிகளின் இணைப்பையும் கொண்ட சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **‘ விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள், க.பொ.த (சா/தர)ப் பரீட்சை - 2026’** எனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சகல விண்ணப்பப்படிவங்களையும் ஏற்றுக்கொள்ளும் **இறுதி திகதி 2026.09.23** என்பதை கவனத்திற் கொள்க.


பரீட்சை ஆணையாளர் நாயகம்,<br>
பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,<br>
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,<br>
த.பெ.இல. - 1503,<br>
கொழும்பு.